## 6.5 மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு நிலையான மாதாந்திர பயணப்படியினை உயர்த்தி அளித்தல்

ஊரக வளர்ச்சி (சி1)துறை

அரசாணை (நிலை) எண்.226 நாள் : 25.10.1999

படிக்க :

1. அரசாணை (நிலை)எண். 362 , ஊரக வளர்ச்சி துறை நாள்– 20.12.97.

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் மற்றவைகளுக்கிடையே ஊராட்சித் தலைவர்கள் / ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் / ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் / மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் / மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கு தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளாட்சி பணிகளை செயல்படுத்த பயணச் செலவுகளை ஈடு செய்வதற்கான நிலையான மாதாந்திரப் பயணப்படி (Fixed Monthly Travelling Allowance) கீழ்கண்டவாறு வழங்குவதற்கு ஆணையிடப்பட்டது.

| | |
|---|---|
| அ) ஊராட்சித் தலைவர்கள் | ரூ. 300/– |
| ஆ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | ரூ. 500/– |
| இ) ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் | ரூ. 200/– |
| ஈ) மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | ரூ. 1000/– |
| உ) மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் | ரூ. 300/– |

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் உரிமைகளும், பொறுப்புகளும் மற்றும் அதிகாரங்களும் வழங்குவதற்கு வழிவகைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்ட குழு தனது அறிக்கையினை 11.1.99 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்த பொழுது உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தற்போது வழங்கப்படும் நிலையான மாதாந்திரப் பயணப்படியினை உயர்த்தியளிக்குமாறு குழுவின் உறுப்பினர்கள் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டனர். மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு 1997 ஆம் ஆண்டு தான் தற்போது வழங்கப்பட்டு வரும் நிலையான மாதாந்திரப் பயணப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், தற்போது வழங்கப்படும் தொகையிலிருந்து 10% உயர்த்தி வழங்கலாம் என கருதி மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு அரசாணை (நிலை) எண். 362, ஊரக வளர்ச்சித் துறை நாள்– 20.12.97–ன்படி தற்போது வழங்கப்பட்டு வரும் நிலையான மாதாந்திரப் பயணப்படியினை 10% உயர்த்தி கீழ்கண்டவாறு வழங்க அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| அ) ஊராட்சித் தலைவர்கள் | ரூ. 330/– |
| ஆ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | ரூ. 550/– |
| இ) ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் | ரூ. 220/– |
| ஈ) மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | ரூ. 1100/– |
| உ) மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் | ரூ. 330/– |

3. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு. எண். 3293/எப்.எஸ்./பி/99 நாள். 1.9.99ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்